06.09.2017

தினமலர்

# செண்டுமல்லி விளைச்சல் அமோகம்: விதை வழங்க விவசாயிகள் எதிர்பார்ப்பு



பெ இந்தாண்டு செண்டுமல்லி பூக்களின் விளைச்சல் :பாளையம்.நா. அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் கோவை ., தர்மபுரி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படும் உதிரிப்பூக்கள் , நாட்டின் பிற மாநிலங்களுக்கும் , வளைகுடா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது . இந்தாண்டு . இவற்றில் முக்கியமானது செண்டுமல்லி, கோவை மாவட்டத்தில் செண்டுமல்லி சாகுபடி அமோகமாக இருப்பதால் , பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இச்செடியின் மொத்த ஆயுள் காலம் , 160 நாட்கள் இரண்டாவது . மாதத்தில் இருந்து, நான்கு நாட்களுக்கு ஒரு முறை , ஏக்கர் ஒன்றுக்கு , 1,500 கிலோ பூக்கள் பூக்கும்ஓணம் திருவிழாக் காலத்தில் கிலோ ., 50 - 60 ரூபாய் விற்பனையாகும் . மற்ற காலகட்டத்தில் கிலோ, 30 - 40 ரூபாய் மட்டுமே விற்பனையாகும் .

இது குறித்து , வெள்ளக்கிணறு விவசாயி ஒருவர் கூறியதாவது தமிழகத்தில் மஞ்சள் :, ஆரஞ்சு வண்ண செண்டு மல்லிகள் பயிரிடப்படுகின்றன இதற்கான விதைகளை . வேளாண் பல்கலையின் தோட்டக்கலைத் துறை . தனியார் மட்டுமே விற்கின்றனர், காய்கறிகளுக்கான விதை உற்பத்தி செய்து , விவசாயிகளுக்கு வழங்குவது போல , செண்டுமல்லிக்கும் விதை உற்பத்தி செய்து வழங்க முன் வரவேண்டும் .

வெளிநாடுகளில் கால்நடை தீவனங்களில் நிறம் ஏற்ற செண்டுமல்லியை இம்மலர்களின் ஏற்றுமதியால் குறிப்பிடத்தக்க அன்னிய .பயன்படுத்துகின்றனர் இதனால் . செலாவணி கிடைக்கிறது, செண்டுமல்லியை விவசாயிகள் பயிரிடவும் , ஏற்றுமதி வணிகத்தை பெருக்கவும் அரசு உதவ வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார் .

### குமரியில் மழை : உயரும் அணைகள்

நாகர்கோவில்கன்னியாகுமரி மாவட்டத்தில் :, விட்டு விட்டு பெய்து வரும் மழையால் , அணைகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது .குமரி மாவட்டத்தில் , தென் மேற்கு பருவமழை பொய்த்து விட்டது விவசாயத்துக்கு உயிர்நாடியான பேச்சிப்பாறை . அணையின் மொத்த உயரம், 48 அடிநீர்மட்டம் ., 6 அடிக்கு சென்றதால் மூடப்பட்டது . இந்நிலையில், மாவட்டத்தில், பரவலாக மழை விட்டு விட்டு பெய்து வருகிறது . மலையோரகிராமங்களில் சீராக மழை பெய்வதால் , அணைகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் ., 11 அடியாக உயர்ந்துள்ளது . தற்போது, அணைக்கு நீர்வரத்து அதிகரித்து , 460 கன அடி தண்ணீர் வருகிறது . பெருஞ்சாணி அணை நீர்மட்டம், 38.50 அடியாக உள்ளது நாகர்கோவில் ., கன்னியாகுமரிக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணை , 11 மாதங்களாக, 'மைனஸ்' என்றளவில் இருந்தது; தற்போதைய மழையால், நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

### திருப்பூர் மாவட்டத்தை குளிர்வித்த கனமழை நொய்யலில் வெள்ளப்பெருக்கு

திருப்பூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் பெய்த கனமழையால் , குளம், குட்டைகள் நிரம்பி வருகின்றன ; நொய்யல் ஆற்றில் , ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு , வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.



திருப்பூர் மாவட்டத்தில் , கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் , கடும் வறட்சி ஏற்பட்டது. இந்தாண்டு துவக்கத்திலும் , போதிய மழை பெய் யாததால் விவசாயிகள் கவலையடைந்தனர். ஜூனில் துவங்கிய தென் மேற்கு பருவமழை யும் , முதல் இரண்டு மாதங்கள் ஏமாற்றியது. எனினும், கடந்த மாத இறுதியில், ஓரளவு மழை பெய்து, 73.45 மி.மீ., என, இயல்பான அளவை விட , கூடுதலாக பதிவானது. கடந்த சில நாட்களாகவே, திருப்பூர் மாவட்டத் தில் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக , திருப்பூர் சுற்றுவட்டாரத்தில் , நேற்று முன்தினம் இரவு , இடி மின்னலுடன் , கனமழை பெய்தது. இதனால் , தாழ்வான பகுதிகள் , குளம், குட்டை உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன. சாமளாபுரம் குளம் , வேட்டுவபாளையம் குளம் நிரம்பியது ; ஆண்டிபாளையம், மாணிக்காபுரம் குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

**நொய்யலில் வெள்ளம்**

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் பெய்துள்ள மழையால் , நொய்யலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. சாய , சாக்கடை கழிவு நீர் மட்டுமே ஓடிய ஆற்றில் , ஆறு ஆண்டுக்கு பின்,

செந்நீர் பாய்ந்ததை , பொதுமக்கள் ஆச்சரியத்து டன் பார்த்து சென்றனர். நொய்யலாற்று வெள்ளத்தால் , பெரியளவில் பாதிப்பு எதுவும் இல்லை ; ஒரு சில இடங்களில், மழையால் தரைப்பாலங்கள் நீரில் மூழ்கி , போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.பலத்த காற்று டன் மழை பெய்ததால் , சில இடங்களில் , மின் கம்பங்கள் சாய்ந்தன. நள்ளிரவில் துண்டிக்கப்பட்ட மின் வினியோகம் , நேற்று பகலில் சீரானது. சில இடங்களில் , மரங்கள் வேரோடு சாய்ந்தன.

**அவிநாசி, பல்லடத்தில்...**

அவிநாசி, பல்லடம், காங்கயம், பொங்கலுார் உள்ளிட்ட பகுதிகளிலும் , நேற்று முன்தினம் இரவு , கனமழை பெய்தது. இதனால் , தாழ்வான பகுதி களில் மழைநீர்தேங்கியுள்ளது. பொங்கலுார் பகுதி யில் , நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன ; விவசாய நிலங்களில் மழைநீர் தேங்கி நின்றது. ஆறு ஆண்டு பின் நொய்யலில் வெள்ளம் ஏற்பட்டு , நீர்நிலைகள் நிரம்பி வருவதால் , விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.---

**போதை வாலிபரால் பரபரப்பு**

நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கை வேடிக்கை பார்க்க , ஆற்றின் கரைகளில் , பொது மக்கள் கூடினர். நேற்று மதியம் , 2:00 மணியளவில், திருப்பூர் வளம் பாலம் அருகே உள்ள பாறையில் , வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ஒரு வாலிபரின் சடலம் கிடப்ப தாக தகவல் பரவியது.தீயணைப்பு துறையினர் , கயிறு, ஏர் டியூப் ஆகியவற்றுடன், வெள்ளத்தினுள் இறங்கி சென்று , பாறையை அடைந்தனர். பாறை யில் கிடந்த வாலிபருக்கு, உயிர் இருந்தது தெரிய வந்தது. அவரை, தண்ணீர் தெளித்து எழுப்பினர். மதுபோதை யில் வாலிபர் படுத்திருப்பது தெரியவந்தது.
எழுப்பிய தீயணைப்பு துறையினரை பார்த்து , 'நான் வெயில் காய்ந்து கொண்டிருக்கிறேன். என்னை எதற்கு எழுப்புகிறீர்கள் ,' என்று கேட்டுள்ளார். பாறை யில் இருந்து இறங்க மறுத்து, மீண்டும் படுத்துக்


கொண்டார். போராடி அவரை பிடித்து 'ஏர் டியூப் 'பில் கட்டி , தீயணைப்பு வீரர்கள் , வெள்ளத் தில் இழுந்து வந்து , கரைசேர்த்தனர். விசார ணையில் , அந்நபர், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகே , அரசம் பட்டியை சேர்ந்த , துளசி,40; பனியன் தொழிலாளி என்று தெரிந்தது. அவருக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர்.

**சூலுாரில் வீடுகளுக்குள் வெள்ளம்**

கோவை மாவட்டம், சூலுார், சுல்தான் பேட்டை சுற்றுவட்டாரபகுதிகளில் நேற்று முன் தினம் இரவு , 12 மணிக்கு மழை பெய்ய துவங்கியது. இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக வெளுத்து வாங்கிய மழையால் , அனைத்து குளம் , குட் டைகள் மற் றும் தடுப்பணைகள் நிரம்பி வழிந் தன. நொய்யல் ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுத்தது. மொத்தம் மழையளவு , 88 மி.மீ., ஆக பதிவானது. வாகராயம்பாளையத்தின் வழியாக செல்லும் கவுசிகா நதியிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் , சுற்றுவட்டாரத்தில் உள்ள தடுப்பணைகள், குளம் குட்டைகள் நிரம்பின. சூலுார் பெரிய குளம், கண்ணம்பாளையம், பள்ளபாளையம், நீலம்பூர் ஆச்சான்குளம் முழு கொள்ளளவை எட்டின. அப்பநாயக்கன்பட்டி ஓடையில் , நள்ளிரவில் பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் , அருகில் உள்ள ஏ.டி. , காலனிக்குள் புகுந்தது. அங்குள்ள , 15க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் மழைநீர் சூழ்ந்ததால் , பொதுமக்கள் செய்வதறியாது திகைத்தனர். வருவாய்துறையினர் , ரோட்டை தோண்டி , மழைநீர் வெளியேற நடவடிக்கை எடுத்தனர். காங்கயம்பாளையம் ராயர் கோவில் அருகில் தடுப்பணை

உடைந்து விளைநிலங்களுக்குள் வெள்ளநீர் புகுந்தது. திருச்சி ரோட்டின் தெற்கு பகுதியில் உள்ள தொழிலகம் , கடைகளில் மழைநீர் தேங்கியது. பட்டணத்தில் , ஜி.கே. நாயுடு நகர் மற்றும் கிருஷ்ணா நகர் குடியிருப் புக்குள்ளும் மழைநீர் புகுந்தது ; அவதிக்குள் ளான பொதுமக்கள் மறியல் செய்தனர். பட்ட ணத்தில் விளைநிலங்களில் மழைநீர் தேங்கிய தால், கொத்தமல்லி பயிரிட்ட விவசாயிகள் பாதிப்படைந்தனர்.

**ஊற்றெடுக்கும் கிணறுகள் : மகிழ்ச்சியில் விவசாயிகள்**



மேட்டூர் மேட்டூர் அணை நீர்மட்டம் :, 66 அடியாக உயர்ந்ததால் , நீர்பரப்பு பகுதியிலுள்ள கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது ; இது, விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது காவிரி நீர் பிடிப்பு பகுதியில் ., பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று முன்தினம் வினாடிக்கு , 21 ஆயிரத்து, 973 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று, 17 ஆயிரத்து, 945 கன அடியாக சரிந்தது குடிநீர் தேவைக்கு ., 700 கன அடி நீர் திறக்கப்பட்டது நீர் திறப்பை விட ., வரத்து கூடுதலாக இருப்பதால் , நேற்று முன்தினம் , 64.55 அடியாக இருந்த நீர்மட்டம் , நேற்று, 66.33 அடியாக உயர்ந்தது மேட்டூர் அணை நீர்பரப்பு பகுதியில் ., 100க்கும் மேற்பட்ட பாசன கிணறுகள் உள்ளன அணை நீர்மட்டம் சரிந்த போது ., கிணறுகள் தண்ணீர் இன்றி வறண்டு விட்டதால், விவசாயிகளால் பயிர் சாகுபடி செய்ய முடியவில்லை தற்போது . நீர்மட்டம், 66 அடியாக உயர்ந்ததால், கிணறுகளில் நீர் ஊற்றெடுக்க துவங்கி உள்ளது, விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

**மழையால் வெடிக்கும் தக்காளி : பழநி விவசாயிகள் கவலை**



பழநி: பழநி பகுதியில் பெய்த மழையால் , தக்காளி பழங்களில் வெடிப்பு ஏற்பட்டு தரமில்லாமல் இருப்பதால் , எதிர்பார்த்த விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் , ஒட்டன்சத்திரம், பழநி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இவை உடுமலைபேட்டை , பொள்ளாச்சி, ஒட்டன்சத்திரம் பழநி மார்க்கெட் மூலம் கேரளா , ஆந்திர மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. போதிய மழை இல்லாததால் பழநி , ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வரத்து குறைந்து மார்க்கெட் மற்றும் உழவர் சந்தையில் கடந்த மாதம் ஒரு கிலோ , 50 -60 ரூபாய் விற்றது. இதனால் நல்ல விலை கிடைக்கும் என்ற ஆவலில் பலர் தக்காளி சாகுபடி செய்தனர்.

இந்நிலையில் சில நாட்களாக மழை பெய்து வருவதால் தக்காளி பழங்களில் வெடிப்பு ஏற்படுகிறது. மேலும் , வெளியூர் தக்காளி வரத்தும் உள்ளதால் சந்தையில் விலை குறைந்து, 15 கிலோ உள்ள பெட்டி 300 - 400 ரூபாய்க்கு விலைபோகிறது. உழவர்சந்தை, மார்க்கெட்டில் ஒரு கிலோ , 20 - 30 ரூபாய் விற்கப்படுகிறது. இதனால் தக்காளி விவசாயிகள் எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துள்ளனர். தக்காளி விலைமேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சம்பா சாகுபடிக்கு டெல்டா விவசாயிகள்... ரெடி! பரவலான மழையால் நேரடி விதைப்பு தீவிரம்**



சிதம்பரம்: டெல்டா பகுதியில் பரவலாக பெய்து வரும் மழையால் சம்பா நேரடி நெல் விதைப்பிற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

மாவட்டத்தில் டெல்டா பகுதியான சிதம்பரம் , காட்டுமன்னார்கோவிலில் கடந்தாண்டு பருவமழை பொய்த்து , வறட்சி நிலவியதால் ஒரு போக சம்பா சாகுபடியும் பொய்த்ததால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகினர். இந்நிலையில், இந்த ஆண்டாவது மேட்டூர் அணை , குறித்த நேரத்தில் திறக்கவில்லை என்றாலும் , தென்மேற்கு பருவ மழையால் ஒரு போக சம்பா சாகுபடி செய்ய காத்திருந்தனர். ஆனால், கடந்த ஆண்டைப்போன்று இந்த ஆண்டும் தென்மேற்கு பருவ மழை சரியாக பெய்யாததால், ஆகஸ்ட் மாதம் கடந்த நிலையில் ஒரு போக சம்பா சாகுபடி செய்ய முடியுமா என்ற அச்சத்தில் , விவசாயிகள் எந்த பராமத்து பணிகளும் துவக்காததால் நிலங்கள் கரம்பாக கிடந்தன. மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததாலும் , பருவ மழை சரியாக பெய்யாததாலும் சாகுபடி எப்படி துவக்குவது என புரியாமல் விவசாயிகள் பெரும் குழப்பத்தில் இருந்து வந்தனர். இந்நிலையில் கடந்த வாரம் முதல் டெல்டா பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ஒரு போக சம்பா சாகுபடியை துவக்க ஆயுத்தமாகியுள்ளனர். அதனையொட்டி கரம்பாக உள்ள நிலங்களில் எரு போட்டு, புழுதி உழவு செய்து, நேரடி நெல் விதைப்புக்கு தயார் படுத்தி வருகின்றனர். மழையும் பெய்யாமல் , மேட்டூர் அணையும் திறக்காமல் இருக்கும் நிலையில் செப்டம்பர் மாதம் சம்பா சாகுபடி துவங்குவதால் , வடக்கிழக்கு பருவ மழையில் நெற்பயிர்கள் என்ன ஆகுமோ என கவலை ஒருபுறம் இருந்தாலும் , தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி சம்பா பட்டத்திற்கு நேரடி நெல் விதைப்பு செய்வதற்கான பணிகளில் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

**திருப்பூர் வாசிகளை மிரள வைத்த கனமழை... இப்படியல்லோ பெய்யோணும்! நொய்யல் ஆற்றில் கரைபுரண்டோடிய செந்நீர்!**

திருப்பூர் திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் :, நேற்றுமுன்தினம் இரவு பெய்த கனமழை , மக்களை திக்குமுக்காடச் செய்தது மழையால் குளம் ., குட்டைகள் நிரம்பி வருவதால் , விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் நொய்யல் ஆற்றில் ., ஆறு ஆண்டுகளுக்கு பிறகு , மீண்டும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது . திருப்பூர் வட்டாரத்தில் , நேற்று முன்தினம் மாலை வரை , வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுசில பகுதிகளில் ., மாலையில் மழை பெய்தது இரவில் குளிர்ந்த காற்று . வீசியதுஇரவு ., 11:00 மணிக்கு மேல் லேசான துவங்கிய மழை ,நேரம் செல்லச்செல்ல வலுவடைந்ததுநள்ளிரவு ., 1:00 மணியளவில், பலத்த இடி , காற்றுடன் கனமழை பெய்யத்துவங்கியது; இரவு, 3:00 மணி வரை, மழை வெளுத்து வாங்கியதுபலத்த இடி., மின்னலுடன் கனமழை பெய்ததால் , பெரும்பாலான இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது ஜன்னல் கண்ணாடி வழியே ., இரவு பகலாக்கும் வகையில் தொடர்ந்து, மின்னலும், இடியும் இருந்ததால் , பலரும் தூக்கம் கலந்து , மிரட்சியடைந்தனர்ஒருவழியாக ., அதிகாலை, 04:00 மணிக்கு மழை நின்றது நொய்யலில் வெள்ளம்திருப்பூரில்., கடந்த , 2011ல், கனமழை பெய்து , ஓடைகள் மற்றும் நொய்யலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது அதன்பின் ., கோவை, திருப்பூர் பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் , தற்போது, நொய்யலில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுமுதலில்., சாய, சாக்கடை நீர் கலந்த கறுப்பு நிறத்தில் நீர் ஓடிய நிலையில் , ஒரு சில மணி நேரத்தில் செந்நீர் ஓடியது நொய்யலில் ஏற்பட்ட. வெள்ளப்பெருக்கு காரணமாக, பழைய மாநகராட்சி பாலம் பகுதியில் , நொய்யல் ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டிருந்த தடுப்பு சுவர் , பல மீட்டர் தூரத்துக்கு , வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது மங்கலம் அருகே ., அக்ராஹார புத்தூர் தரைப்பாலம், அணைப்பாளையம் பாலம் மற்றும் திருப்பூர் ஈஸ்வரன் கோவில் பழைய பாலம் ஆகியன , வெள்ள நீரில் மூழ்கியது இதனால் ., தடுப்புகள் அமைக்கப்பட்டு , போக்குவரத்து நிறுத்தப்பட்டது காங்கயத்தில் 118 மி.மீ., நேற்று முன்தினம் முதல் , நேற்று காலை வரை , அவிநாசியில், 37 மி.மீ.,; திருப்பூரில், 57; உடுமலை, 15.40; பல்லடம், 48; தாராபுரம், 22; காங்கயம், 118; மூலனூர், 40 மி.மீ.,மழை பெய்தது . மாவட்டத்தின் சராசரி மழையளவு, 48.20 மி.மீ., ஆகும் கடந்த மூன்று நாட்களில் .,

140.21 மி.மீ.,மழை பெய்துள்ளது.ஜூன் முதல் செப்., வரையிலான தென் மேற்கு பருவ மழை காலத்தில் , மாவட்டத்தில் பத்தாண்டு சராசரி மழையளவு , 125.21 மி.மீ.,ஆகும்.செப்.,மாத சராசரி , 51.54 மி.மீ.,ஆகும் ஆனால் இம்முறை ., மூன்று நாளில், 140.21 மி.மீ., மழை பெய்துள்ளது இந்தாண்டு ., தென் மேற்கு பருவ மழை காலத்தில், நேற்று வரை, 236.78 மி.மீ.,மழை பதிவாகியுள்ளது.

**அடர் நடவு கொய்யா**



திண்டுக்கல் மாவட்டத்தில் பல வகை பயிர்கள் சாகுபடி அதிகம் செய்தாலும் குறைந்த செலவில் கூடுதல் லாபம் தருவது கொய்யா சாகுபடி தான் இதனால் விவசாயிகள் . கொய்யாவிற்கு மக்களிடம் கிடைக்கும் . அதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் வரவேற்பும் இச்சாகுபடி பரப்பை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது கொய்யா . சாகுபடியாளர்கள் வழக்கமாக5 மீ., நீளம், 5 மீ., அகலத்தில் ஏக்கருக்கு 160 கன்றுகள் நட்டு பராமரிப்பது வழக்கம் . திண்டுக்கல் மாவட்டம் , ரெட்டியார்சத்திரம் அருகே டி புதுப்பட்டி விவசாயி சசிக்கண்ணன்., மூன்றரை ஏக்கர் நிலத்தில் வறட்சியை சமாளிக்கும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பனாரஸ் ரக கொய்யா நடவு செய்தார்.

**அடர் நடவு அதிக கன்று** இதற்காக 3 மீ.,க்கு 3 மீ., என்ற நீள, அகலத்தில் ஏக்கருக்கு 444 கன்றுகள் வீதம் மூன்றரை ஏக்கரில் 1,555 கன்றுகளை அடர் நடவு செய்தார் . நீர்பாய்ச்ச சொட்டு நீர் வசதிசெய்தார் வழக்கமாக மூன்று ஆண்டுக்குப் பின் மகசூல் . தரும் கொய்யா, இம்முறையில் நடவு செய்த ஒன்றரை ஆண்டிலேயே மகசூல் தந்தது.

காந்தி கிராமம் வேளாண் அறிவியல் மைய ஆலோசனைப்படி , சொட்டு நீர்பாசனத்தால் தண்ணீர் தட்டுப்பாட்டை சாதுர்யமாக சமாளித்தார் உலர் நடவு . முறையில் அதிக எண்ணிக்கையில் பழக்கன்றுகளை நடவு செய்ததுடன் , சரியான முறையில் கவாத்து, நீர் நிர்வாகம் செய்தார் இதனால் மரங்கள் யாவும் ஒரே அளவில் . சீரான உயரம், சரியான அளவில் கிளைகள் படர்ந்து மகசூல் கொழித்தது . தரமானதாகவும், கூடுதல் எடையுடனும் பழங்கள் கிடைத்தன மூன்று சீச.ன் அறுவடை விவசாயி சசிகண்ணன் கூறியதாவது ஆண்டுக்கு மூன்று சீசன்களில் :, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை அறுவடை செய்யலாம் தற்போது வரை .3 டன் கொய்யா அறுவடை செய்துள்ளேன் தோட்டத்திற்கே வரும் வியாபாரிகள் கிலோ .30 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர் இரண்டே ஆண்டில் .90 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது . தொழில் நுட்ப ரீதியாக சாகுபடி . இப்போதே சாகுபடி செலவை பெற்றுவிட்டார் . செய்வதால் செடிகள் அனைத்தும் ஒரே மாதிரியான உயரத்துடன் படர்ந்துள்ளது மருந்து தெளித்தல், கவாத்து செய்வது, மகசூல் எடுப்பது எளிமையாக உள்ளது . இதனால் இனி வரும் காலங்களில் கிடைப்பதெல்லாம் லாபமே மேலும் முறையாக . பராமரித்தால்15 ஆண்டுகள் வரை தொடர் மகசூல் பெறலாம் , என்றார்.

**ஏழு ஆண்டு பலன்**காந்திகிராம வேளாண் அறிவியல் தொழில் நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறுகையில் , "பழ மரங்களை அடர் நடவு முறையில் நடவு செய்து சொட்டு நீர் பாசனம் , கரையும் உரம் , சரியான கவாத்து செய்து பராமரித்ல் அதிக விளைச்சலுடன், தரமான பழங்களை பெறலாம் அதிக எண்ணிக்கையில் செடிகளை . பராமரிப்பதால் ஏழு ஆண்டு பலன் மூன்றே ஆண்டுகளில் கிடைத்துவிடும்," என்றார் . தொடர்புக்கு98431- 87751.

## கோழிகளை பராமரிக்கும் முறை



நம் நாட்டில் தொன்று தொட்டு கோழிகள் வளர்க்கப்படுகின்றன பல ஆயிரம் . கோழி வளர்ப்பு . ஆண்டுகளாக கோழிகள் மனிதனோடு இணைந்து வாழ்கின்றன கோழிகளின் பராமரிப்பு . என்பது பெரிய அளவிலான தொழிலாக மாறி விட்டது எனினும் கோழிகளை நோய்களில் . முறைகளும் வெகுவாக முன்னேறி விட்டன இருந்து பாதுகாத்திட வேண்டும்.

**கூரை அமைக்கும் முறை**

சில ஆண்டுகளாக வெப்ப நிலை அதிகரித்து வருகின்றன இதனால் ஏற்படும் . கோழிப்பண்ணைக்காக கொட்டகைகள் அமைக்கும் . நோய்களை தவிர்க்க வேண்டும் போதே கொட்டகையின் நீளப்பகுதியை கிழக்கு மேற்கான திசையில் அமைக்க கொ .வேண்டும்ட்டகையை அமைக்க முடிவு செய்யும்போது , அது கீற்று கொட்டகையா? ஒட்டுக்கூரையா, ஆஸ்பெஸ்டாஸ் கூரையா என்பதை விவசாயிகள் தீர்மானிக்க வேண்டும் அதுனுள் அதிக . கீற்று கொட்டகை என்றால் நல்லது தான் . மற்ற வகை கூரை என்றால் பண்ணையினுள் உள் வெப்பம் . வெப்பம் இருக்காது அதிகம்இருக்கும் . இதை தவிர்க்க ஓடுகளின் மீது தண்ணீர் தெளித்து விடலாம் . ஓடுகளின் மீது தென்னங்கீற்று, வைக்கோல், தேங்காய் நார்க்கழிவுகளை பரப்பி , அதன் மீது தண்ணீர் தெளிக்கலாம் தனால் மேற்கூரை வழியாக கோழிகளை வெப்பம் .தாக்காது

**தோல்முட்டை ஏன்**

தற்போது மழை காலம் என்றாலும் போதுமான மழையின்றி கோடையை போல் வெப்பம் தாக்குதல் உள்ளது தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் கோடையில் சுற்றுப்புற . வெப்ப நிலை37 டிகிரி செல்சியஸ் முதல் 41 செல்சியஸ் வரை ஏறுமுகத்தில் உணரப்படுகிறது இச்சமயத்தில் கோழிகள் தீவனம் உண்பது குறைவதால் .

முட்டைகளின்எண்ணிக்கை குறைகிறது முட்டையின் ஓடு மெல்லியதாகவும் . கோழிகளில் வெளி வெப்ப நிலை . அமையப்பெற்று தோல்முட்டை இடுகின்றன இவ்வகை தாக்குதல்களினால் இளங் . பாதிப்பால் மூச்சிறைப்பு அதிகமாகிறது குஞ்சுகளை விட வளர்ந்த எடை கூடுதலாக உள்ள இறைச்சிக் கோழிகளும், அதிக எண்ணிக்கையில் முட்டையிடும் கோழிகளுமே பாதிப்புக்கு உள்ளாகின்றன .

வெப்பம் அதிகமாக இருக்கும்போது ஒரு பங்கு தீவனம் உண்ணும் கோழிகள் மூன்று பங்கு தண்ணீர் குடிக்க வேண்டும் எனவே தண்ணீர் வைக்கும் பாத்திரங்களை . . அதிகப்படுத்த வேண்டும்100 கோழிகளுக்கு நான்கு பாத்திரங்கள் இருந்தால் மிக நல்லது காலை .10:00 முதல் மாலை 4:00 மணிக்குள் இடைப்பட்ட வேளையில் இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை சுத்தமான தண்ணீர் அடிக்கடி மாற்றி வைக்க வேண்டும் பகல் . இதனால் கோழிகள் நல்ல ஆர்வத்துடன் அதிகளவு நீர் குடிக்கும் . நேரத்தில் தீவனம் வைப்பதை தவிர்க்க வேண்டும் ஒரு கோழிக்கு .5 மில்லி கிராம் வைட்டமின் சி கலவை என்ற அளவில் தண்ணீரில் கலந்து வைக்கலாம் .

வெப்பம் அதிகமாக இருக்கும்போது ஒரு பங்கு தீவனம் உண்ணும் கோழிகள் மூன்று பங்கு தண்ணீர் குடிக்க வேண்டும் தொடர்புக்கு 94864 69044- டாக்டர் விராஜேந்திரன்.முன்னாள் இணை இயக்குனர்கால்நடை பராமரிப்புத்துறை.

**சிம்ரன் கத்தரிக்கா சாகுபடி**



தேனியை சேர்ந்த எம்.ஏ., பி.எட்., பட்டதாரி முருகன் கை நிறைய சம்பளம் தரும் . எனினும் தனது பாரம்பரியமான விவசாயத்தில் ஈடுபடவே .வேலை காத்திருந்தது தனது மூதாதையர .முருகன் முடிவு செய்தார் செய்த விவசாய தொழில்நுட்பத்தை கையில் எடுத்தார் இப்போது விவசாயத்தில் சாதனை படைத்து படித்தோர் மத்தியில் . .முன்னுதாரணமாக உள்ளார்"தனியார் நிறுவனங்களில் வேலை செய்து 10

ஆண்டுகளில் சம்பாதிப்பதை ஒரு ஆண்டில் விவசாயம் செய்து சம்பாதித்துவிடலாம்." என்கிறார் முருகன்:அவர் கூறியதாவது.

சிறுவயதில் இருந்து விவசாயம் அத்துப்படி என்றபோதும், கடந்த 6 ஆண்டுகளாக முழுநேர விவசாயியாக உள்ளேன் தேனி குன்னுார் அருகே .1 ஏக்கரில் கத்தரி பயிரிட்டுள்ளேன் இப்பகுதி மண்ணிற்கு .'சிம்ரன்' ரக கத்தரி நல்ல விளைச்சலை கொடுக்கும்.டி.ஆர்.சி ., கீரி, பச்சை கத்தரி ரகத்தின் விளைச்சலும் நன்றாக உள்ளதுகத்தரியை மேடான .
பகுதியில் தான் பயிரிட வேண்டும்தண்ணீர் தேங்கும் பகுதியில் பயிரிட்டால் ., அதிக அளவில் வேர் அழுகல் நோய் தாக்க வாய்ப்புகள் உண்டுஇயற்கை உரங்கள் ., ஆடு, மாடுகளின் சாணங்கள் கொட்டப்பட்ட நிலத்தினை, உழுதபின் 3 நாட்கள் காய வைக்க வேண்டும்நாற்றங்கால் போட்டு தனித்தனியாக .

எடுக்கப்பட்ட கத்தரி செடிகளை, 2 அடி இடைவெளியில் நட்டு தண்ணீர் விட வேண்டும் .3 நாட்கள் கழித்து களை எடுத்து செடிகளை சுற்றி கொத்திவிடுவேன் . அளவான தண்ணீர் விட்டுவந்தால், 40 நாட்களில் பூக்கள் பூக்கும் .45வது நாளில் காய்கள் காய்க்க தொடங்கும் .4 நாட்களுக்கு ஒரு முறை காய்களை பறித்து கொள்ளலாம்.
கத்தரியை பாழாக்குவது வேர் புழுக்கள் இதனை கட்டுப்படுத்த வேப்பம்புண்ணாக்கை . இதுமட்டுமல்லாமல் .உரமாக வைக்கவேண்டும், காய் புழு மற்றும் தண்டு புழு கத்தரி

விளைச்சலை கடுமையாக பாதிக்கும்டெவிகேட் ., என்கவுன்டர் போன்ற பூச்சி கொல்லி மருந்துகளை சிறிது தண்ணீரில் கலந்து தெளித்தால், காய் புழு, தண்டு புழு செடியை
தாக்காது நோய் தாக்கிய கத்தரியை தவிர்க்க வேப்பஎண்ணெயில் அரளி விதை சாறு . ரசாயன மரு .கலந்து தெளிக்கவேண்டும்ந்து அடிக்காமல் நோய் பாதிப்பின்றி கட்டுப்படுத்தி வருகிறேன் .1 ஏக்கரில் கத்தரி செடி பயிரிட்டால், ஒன்றரை டன் கத்தரிக்காய் விளைச்சல் கிடைக்கும் .தற்போது கிலோ ரூ .20 முதல் 30க்கு விலைபோகிறது, என்றார் தொடர்புக்கு .96985 99047. - எம்கார்த்திக்., தேனி.

தினமணி

## கோவையில் பலத்த மழை: நொய்யல் , கௌசிகா நதிகளில் வெள்ளப் பெருக்கு



கோவை மாநகரம் , புறநகர்ப் பகுதிகளில் திங்கள்கிழமை நள்ளிரவு பெய்த பலத்த மழையால் பல ஆண்டுகளுக்குப் பிறகு கௌசிகா நதி , நொய்யலில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

கோவை மாவட்டத்தையொட்டி உள்ள கேரள மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை பெய்து வந்தாலும், ஆகஸ்ட் மாதம் வரை கோவையில் எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யாத நிலை இருந்து வந்தது.

இதனால், கோவையில் உள்ள பல குளங்கள் வறண்டு காணப்பட்டன. மேலும், நிலத்தடி நீர்மட்டமும் அதலபாதாளத்துக்குச் சென்றிருந்தது. புறநகர்ப் பகுதிகளில் தென்னை மரங்கள் நூற்றுக்கணக்கில் கருகின. கால்நடைகளுக்குத் தீவனம் , குடிநீர் இல்லாததால் மாடுகளை விற்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

கடந்த மாதம் அவ்வப்போது சாரல் மழை பெய்தாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மழை இல்லை. இந்நிலையில் , மாவட்டம் முழுவதிலும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுமார் 5 மணி நேரம் பலத்த மழை பெய்தது. அதேபோல் , மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் மழை பெய்ததால் நொய்யல் வடிநிலத்தில் உள்ள குளங்களுக்கு நீர்வரத்து தொடங்கியது.

இதைத் தொடர்ந்து , கடந்த சனிக்கிழமையும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு மழை பெய்தது. இந்நிலையில் , கோவை மாநகர் , புறநகர்ப் பகுதிகளில் திங்கள்கிழமை நள்ளிரவு பலத்த மழை பெய்தது. அதிகாலை 1 மணி அளவில் தூரலுடன் தொடங்கிய

மழை நேரம் செல்லச் செல்ல வலுக்கத் தொடங்கியது. அதிகாலை 4 மணி வரை சுமார் 3 மணி நேரம் தொடர்ந்து இடி , மின்னலுடன் கொட்டிய மழையால் கோவை மாநகரம் வெள்ளக் காடானது.

ராமநாதபுரம் சந்திப்பு , அவிநாசி சாலை , பீளமேடு, காந்திபுரம், ரயில் நிலையம் , சிங்காநல்லூர் உள்ளிட்ட இடங்களில் சாலைகள் மழை வெள்ளத்தில் மூழ்கின.
கௌசிகா நதி, நொய்யலில் வெள்ளம்:மாநகரில் பெய்த மழை வெள்ளத்துடன் , சூலூர் பகுதியில் 88 மி.மீ. அளவுக்கு கொட்டிய மழை நீரும் சேர்ந்ததால் நொய்யலில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. கோவை மாநகரின் ஒரு பகுதி , நீலாம்பூர், வெள்ளானப்பட்டி பகுதிகளில் பெய்த மழையால் கௌசிகா நதியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.
கணியூர் அருகே உள்ள வாகராயம்பாளையம் பகுதியில் தொடங்கி , கணபதிபாளையம், கிட்டாம்பாளையம், தெக்கலூர் பகுதிகளில் உள்ள கௌசிகா நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடி வஞ்சிபாளையம் அருகே நொய்யலில் கலந்தது.
இந்த மழையால் கோவை மாநகரில் சிங்காநல்லூர் குளத்துக்கு மேற்கில் உள்ள குளங்களுக்கு குறிப்பிடத்தகுந்த அளவுக்கு நீர் வரத்து இல்லை என்றாலும் , கிழக்குப் பகுதியில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் ஒரே இரவில் நிரம்பின. அதன்படி, சூலூர் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீர்வரத்து இன்றி வறண்டிருந்த உள்வேலாங்குட்டை, புங்கன்குட்டை ஆகியவை செவ்வாய்க்கிழமை காலை நிரம்பின.

இதிலிருந்து வெளியேறும் உபரிநீரால் அதைத் தொடர்ந்துள்ள ராமச்சந்திரன் குளம் , கலங்கல் குட்டை உள்ளிட்டவை நிரம்பின. பாப்பம்பட்டி பகுதியில் ஓடைகளில் நீர் பெருக்கெடுத்ததால் கலங்கல் குட்டை நிரம்பியது. இந்தக் குட்டையின் கரையில் உடைப்பு ஏற்பட்டு அருகில் உள்ள குடியிருப்புகளில் நீர் புகுந்தது. இதை பொதுப் பணித் துறை அதிகாரிகள் சரிசெய்தனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காசிகவுண்டன்புதூரில் உள்ள நாரணத்தான்குட்டைக்குச் செல்லும் நீர் வழிப் பாதை அடைப்புகள் சரிசெய்யப்பட்டு வருவதாகவும் , மழை தொடரும்பட்சத்தில் இதன் வழியாக உபரிநீர் நொய்யலுக்கு திருப்பப்படும் என்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீடுகள் இடிந்தன: மாநகரில் பெய்த பலத்த மழையால் புலியகுளம் அருகே உள்ள கல்லுக்குழி குடியிருப்பை வெள்ளம் சூழ்ந்தது. இதில் , அங்குள்ள சுமார் 30-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இரு வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன.

இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.கோவை மாநகராட்சி 39-ஆவது வார்டுக்கு உள்பட்ட பீளமேடு, பொரிக்கடை சந்து பகுதியில் இருந்த வீடுகள் நீரில் மூழ்கின. இதில், 4 வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன.

ரயில் நிலையத்தின் முதல் நடைமேடையையொட்டி உள்ள சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது.

கோவை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): சூலூர் 88, வால்பாறை 68, கோவை தெற்கு 49, சின்கோனா 30, விமான நிலையம் 22.60, வேளாண் பல்கலைக்கழகம் 19.20, பொள்ளாச்சி 15.

சிறுவாணி அணைப் பகுதி 15. சிறுவாணி அணையின் நீர் இருப்பு 35.26 அடியாக உயர்ந்துள்ளது. பில்லூர் அணைக்கு வினாடிக்கு 1,229 கனஅடி நீர்வரத்து இருக்கும் நிலையில் அணையில் 87.25 அடி நீர் இருப்பு உள்ளது.

தடுப்பணைகள் வேண்டும்: கௌசிகா நதியில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நிலையில் அந்த நீரை சேமிப்பதற்கான தடுப்பணைகள் இல்லாததால் நீரின் பெரும் பகுதி நொய்யலில் கலந்து வீணாகிவிட்டதாக அத்திக்கடவு- கௌசிகா நதி மேம்பாட்டுச் சங்கச் செயலர் பி.கே.செல்வராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: கௌசிகா நதியின் மொத்த நீளமான 48 கிலோ மீட்டரில் மொத்தம் 19 தடுப்பணைகள் மட்டுமே உள்ளன. தற்போது , பெய்த மழையால் 5 தடுப்பணைகள் மட்டுமே நிரம்பியுள்ளன.

கௌசிகா நதியை ஆறாகப் பார்க்காமல் நீர்ப்பிடிப்புப் பகுதியாக மட்டுமே பார்க்க வேண்டும் என்ற கூற்றுக்கு ஏற்ப நதியின் கடைமடை பகுதியில் மட்டுமே மழை பெய்தது. மேலும், சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு கௌசிகா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நதியில் மேலும் 10 இடங்களில் தடுப்பணைகள் வேண்டும் என்று அரசுக்கு மனு அளித்துள்ளோம். ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை வீதம் அமைத்திருந்தாலும் கூட, இந்த நீரை மொத்தமாக சேமித்து வைத்திருக்க முடியும் என்றார்.

## சில இடங்களில் இன்று மழை பெய்யும்

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் புதன்கிழமை (செப். 6) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் மேற்குப் பருவமழை தற்போது தெற்கு உள் கர்நாடகம் , கேரளத்தில் தீவிரமாகியுள்ளது. இதனால் அங்கு பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை , மன்னார் கடல் பகுதியின் வளிமண்டலத்தில் மையம் கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக மழை பெய்து வந்தது. இந்த மழை சில இடங்களில் செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்தது. மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பலத்த மழை...: இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியது: வடகேரளப் பகுதியின் வளிமண்டலத்தின் நிலை கொண்டுள்ள மேலடுக்கு சுழற்சி , வெப்பச்சலனம் ஆகியவை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். தென் தமிழகம் மற்றும் வடதமிழகத்தின் உள் பகுதிகளின் சில இடங்களில் பலத்த மழை பெய்யும். சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். மாலை அல்லது இரவில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய பெய்ய வாய்ப்பு உள்ளது.

உத்தமபாளையத்தில் 240 மி.மீ...தமிழகம் மற்றும் புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி , தேனி மாவட்டம் உத்தம பாளையத்தில் 240 மி.மீ. மழை பெய்தது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 66.38 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 66.38 அடியாக உயர்ந்தது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் , மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. திங்கள்கிழமை மழை சற்று தணிந்ததால் , அன்று காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 21,973 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 17,945 கன அடியாகச் சரிந்தது.

அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 29.67 டி.எம்.சி.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

## முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

தேக்கடி முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து :905 கனஅடியில் இருந்து 1,134 கனஅடியாக அதிகரித்துள்ளது முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் .121.50 அடியாகவும், நீர்இருப்பு 2,925 மில்லியன் கனஅடியாகவும் உள்ளது . முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தமிழக குடிநீர் தேவைக்கான நீர்திறப்பு 218 கனஅடியாக உள்ளது.

## தேனியில் கனமழை: வராக நதியில் வெள்ளப்பெருக்கு

தேனி தேனி மாவட்டம் பெரியகுளம் சுற்றுவட்டாரப் பகுதியில் பெய்த கனமழை : மேற்கு தொடர்ச்சி மலைப் . காரணமாக வராக நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது பகுதியில் பெய்யும் மழையால் கும்பக்கரை அருவியில் குளிக்க 5வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.